وسائل الثبات ـ تاميلي

# உறுதியின் வழிமுறைகள்




جمعية الدعوة بالزلفي

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالزلفي

55



هاتف: ٤٢٣٤٤٦٦ ٠١٦ ـ فاكس: ٤٢٣٤٤٧٧ ٠١٦

# உறுதியின் வழிமுறைகள்

## وسائل الثبات

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات في الزلفي
Tel: 966 164234466 - Fax: 966 164234477

**وسائل الثبات**

**أعده وترجمه إلى اللغة التاميلية:**

**جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالزلفي**

**الطبعة الثالثة: ١٤٤٢/٨ هـ.**


**ح شعبة توعية الجاليات بالزلفي، ١٤١٩هـ**

*فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر*

شعبة توعية الجاليات بالزلفي

وسائل الثبات - الزلفي

٥٣ ص؛ ١٢ × ١٧ سم

ردمك : ٩- ٥٠ - ٨١٣ - ٩٩٦٠

(النص باللغة التاميلية)

١ - الوعظ والإرشاد ٢ - الفتن في الإسلام أ. العنوان

ديوي ٢١٣ ١٩٠٤٣٠٥

رقم الإيداع : ١٩/٤٣٠٥

ردمك : ٩- ٥٠ - ٨١٣ - ٩٩٦٠

# وسائل الثبات

# சத்தியத்தில் நிலைத்திருப்பதற்கான வழிமுறைகள்

## முன்னுரை

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! இறையருளும் சாந்தியும் இறைத்தூதர் முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தினர் மற்றும் தோழர்கள் மீதும் என்றென்றும் நிலவட்டுமாக!

ஒரு உண்மை முஸ்லிம் கடைபிடிக்க வேண்டிய மேலான பண்பும் அவனுடைய உன்னதச் சிறப்பும் என்ன வெனில் இறைமார்க்கத்தில் உறுதியாக இருப்பதும் முஹம்மது (ஸல்) அவர்களின் நற்குணங்களைப் பேணு வதும் அவர்களைப் பின்பற்றி வாழ்வதும் தான்! இதில் எவ்விதத் தயக்கமும் இருக்கக் கூடாது. தற்காலிகமாக ஏற்படும் ஐயத்தினால் அல்லது கட்டுக்கடங்காத மன இச்சையினால் அல்லது பரவலான குழப்பத்தினால் தடம் புரண்டுவிடக் கூடாது. ஏனெனில் சத்தியத்திற்கும் அசத்தி யத்திற்கும் மத்தியில் தடுமாறுவதும் நிரூபணமான நபி வழியைக் கடைபிடித்த பின்பு கைவிடுவதும் நம்பிக்கை யாளர்களின் பண்பாக இருக்க முடியாது. மாறாக அது நிராகரிப்பாளர்கள் மற்றும் நயவஞ்சகர்களின் பண்பாகும். இவர்கள் தமது சொல்லுக்கும் செயலுக்குமிடையில் முரண்படக்கூடியவர்கள் மட்டுமல்ல வாழ்வின் அனைத்து

நிலைகளிலும் தடம் புறளக்கூடியவர்கள் என்று திருக் குர்ஆன் கூறுகிறது.

﴿ وَمِنَ النَّاسِ مَنْ يَعْبُدُ اللهَ عَلَى حَرْفٍ فَإِنْ أَصَابَهُ خَيْرٌ اطْمَأَنَّ بِهِ وَإِنْ أَصَابَتْهُ فِتْنَةٌ انْقَلَبَ عَلَى وَجْهِهِ خَسِرَ الدُّنْيَا وَالآَخِرَةَ ذَلِكَ هُوَ الخُسْرَانُ المُبِينُ ﴾ [الحج :١١]

விளிம்பில் இருந்து கொண்டு அல்லாஹ்வை வணங்கு பவனும் மனிதர்களில் இருக்கிறான். அவனுக்கு ஏதேனும் ஆதாயம் கிடைத்தால் அதில் நிம்மதியடைகிறான். அவனுக்குச் சோதனை ஏற்பட்டால் தலைகீழாக மாறி விடுகிறான். இவ்வுலகிலும் மறுமையிலும் அவன் நஷ்ட மடைந்து விட்டான். இதுவே தெளிவான நஷ்டமாகும். (அல்குர்ஆன் 22:11)

உண்மையான வழிமுறையைப் பற்றிப் பிடிப்பதும் அதில் உறுதியாக இருப்பதும் மிக முக்கியமான விஷயங் களாகும். இவற்றைப் பேணிக் கொள்வதும் இதற்காகப் பாடுபடுவதும் ஒரு நம்பிக்கையாளனின் கடமையாகும். இவ்விரண்டும் மிகப் பெரிய அருட்கொடைகளாகும். மனிதன் அவற்றுக்கு நன்றி செலுத்தவும் அவற்றைப் பேணி நடக்கவும் கடமைப்பட்டுள்ளான்.

பற்றிப் பிடித்தல் என்பதன் கருத்து அல்லாஹ்வுக்கு அடிபணிவதையும் வழிபடுவதையும் பற்றிப் பிடித்தலாகும். மேலும் அவன் ஏவிய கடமைகளை நிறைவேற்றுவதும் அவன் விலக்கியவற்றிலிருந்து விலகியிருப்பதும் அதில் நிலைத்திருப்பதும் ஆகும்.

عَنْ سُفْيَانَ بْنِ عَبْدِ الله قَالَ قُلْتُ يَا رَسُولَ الله قُلْ لِي فِي الْإِسْلَامِ قَوْلًا لَا أَسْأَلُ عَنْهُ أَحَدًا بَعْدَكَ قَالَ قُلْ آمَنْتُ بِالله ثُمَّ اسْتَقِمْ (م/ ٣٨، حم/ ١٤٨٦٩)

ஸுஃப்யான் பின் அப்துல்லாஹ்(ரலி) அறிவிக்கிறார்கள்: "அல்லாஹ்வின் தூதரே! இஸ்லாத்தில் எனக்கு ஒரு வார்த்தை சொல்லுங்கள்- உங்களுக்குப் பிறகு யாரிடமும் அது பற்றி நான் கேட்க வேண்டியது வரக் கூடாது" என்று கேட்டேன். அதற்கு நபி(ஸல்) அவர்கள், "அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டேன் என்று கூறி, பிறகு அதில் உறுதியாக இரு" என்று கூறினார்கள். நூல்: முஸ்லிம்(38), அஹ்மத் (14869)

இந்ந பிமொழியில் உறுதியாக இருக்க வேண்டும் என்று நபி(ஸல்)அவர்கள் ஏவியுள்ளார்கள். உறுதியாக இருத்தல் என்பது வழிபிறழாமல் குர்ஆன் மற்றும் நபிவழிக்கு மாற்றம் செய்யாமல் நேரான பாதையில் செல்வதாகும். பற்றிப் பிடித்தல் என்பதன் உண்மை நிலை இதுவேயாகும்.

அவ்வாறாயின் பற்றிப் பிடித்தல் என்பது அல்லாஹ்வின் மார்க்கத்தை வெளிப்படையிலும் அந்தரங்கத்திலும் பற்றிப் பிடித்து வாழ்வதாகும். அதாவது கொள்கை கோட் பாடுகளில், வணக்க வழிபாடுகளில், ஒழுக்கப் பண்பாடு களில், கொடுக்கல் வாங்கல்களில் இறை வரம்புகளை முழுமையாகப் பற்றிப் பிடித்தலாகும். இதுவே பரிபூரண மான பற்றிப் பிடித்தலாகும். பள்ளிவாசலில், தொழிலில்,

கடைவீதியில், வீட்டில் என வாழ்க்கையின் எல்லா விவகாரங்களிலும் இறைமார்க்கத்தைப் பற்றிப் பிடிக்க வேண்டும்.

﴿قُلْ إِنَّ صَلَاتِي وَنُسُكِي وَمَحْيَايَ وَمَمَاتِي لِلهِ رَبِّ العَالَمِينَ ، لَا شَرِيكَ لَهُ وَبِذَلِكَ أُمِرْتُ وَأَنَا أَوَّلُ الْمُسْلِمِينَ﴾ [الأنعام :١٦٢،١٦٣]

எனது தொழுகை, எனது குர்பானி, எனது வாழ்வு, எனது மரணம் யாவும் அகிலத்தின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே சொந்தமாகும். (அல்குர்ஆன் 6:162,163)

அடியான் பாவமன்னிப்புக் கோரி அல்லாஹ்வின் கட்டளையைப் பற்றிப் பிடித்து வாழும்போது அவன் ஒரு புதிய வாழ்க்கைக்குத் திரும்பிவிட்டதாக உணர்கிறான். வீண் விளையாட்டுக்கள் நிறைந்த வாழ்க்கைக்கும், அல்லாஹ்வுக்கு மாறுசெய்யக்கூடிய, கட்டுப்பாடற்ற, வரம்பு மீறக்கூடிய வாழ்க்கைக்கும் அவன் விடை கொடுத்து விட்டதாகவும் மேலும் அல்லாஹ்வை நோக்கி அவன் வந்துவிட்டதாகவும் உணர்கிறான். எனவே புதிய வாழ்க்கைக்கு ஏற்றதொரு வாழ்க்கைச் சூழலைத் தனக்காக அவன் உருவாக்கிக் கொள்வதும் தனது வாழ்வின் போக்கில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்வதும் அவசியமாகும்.

அவன் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை விட்டு விட்டு இஸ்லாமியப் புத்தகத்தைப் படிக்க வேண்டும். அவன் வாசித்துக் கொண்டிருந்த பத்திரிக்கையைத்

தூக்கி எறிந்து விட்டு இஸ்லாமியப் பத்திரிக்கையை வாங்கிப் படிக்க வேண்டும். அவன் கேட்டுக் கொண் டிருந்த பாட்டுக் கேஸட்டுகளுக்கும் வேறு பல கேஸட்டு களுக்கும் பதிலாக இஸ்லாமியக் கேஸட்டுகளைக் கேட்க ஆரம்பிக்க வேண்டும். தூக்கமும் அது போலத் தான். தாமதமாகத் தூங்கிக் கொண்டிருந்தால் அதை மாற்றி பஜர் தொழுகைக்கு விழிக்கின்ற வகையில் சீக்கிரமாகத் தூங்க ஆரம்பித்துவிட வேண்டும். தவறான பாதையில் தன்னுடன் வந்து கொண்டிருந்த நண்பர் களுக்குப் பகரமாக நேர்வழியில் செல்கின்ற, சத்தியத் திற்குத் துணை நிற்கின்ற நண்பர்களை அவன் எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறே மற்ற விஷயங்களிலும் நடந்து கொள்ள வேண்டும்.

இறைமார்க்கத்தை உறுதியாகக் கடைபிடிப்பது தான் நேரான பாதையில் உறுதியுடனும் சீராகவும் நடக்க விரும்பும் உண்மையான ஒவ்வொரு முஸ்லிமின் அடிப் படைத் தேட்டமாகும். அதிலும் குறிப்பாக குழப்பங்கள் அதிகமாகி, பாலுணர்வுகளைத் தூண்டக்கூடிய விஷயங்கள் பரவலாகி, வழிபிறழ்ந்தவர்களும் தீய வழிக்குத் திரும்பியவர்களும் பல்கிப் பெருகியிருக்கின்ற இந்தக் காலத்தில் இது மிக அவசியமாகும். சிலர் பயத்தால் வழிபிறழ்ந்துள்ளனர். இன்னும் சிலர் விரும்பி வழிபிறழ்ந்துள்ளனர். வேறு சிலர் அறியாமையால் வழி பிறழ்ந்துள்ளனர்.

இந்தக் காலம் எத்தகையது எனில் இந்தக் காலத்தில் உண்மைகள் மாறிவிட்டிருக்கின்றன, கருத்துகள் தலை கீழாக மாறிவிட்டிருக்கின்றன. குழப்பங்கள் அதிகரித்து விட்டன. பாலுணர்வுகளைத் தூண்டக்கூடிய விஷயங்கள் தொடர்கதையாகி விட்டிருக்கின்றன, பாழ்படுத்தக்கூடிய வழிகள் எளிதாகிவிட்டிருக்கின்றன. இவ்வுலகம் தன் அற்பமான இன்பங்களால் மனித உள்ளங்களைக் கவரக் கூடியதாகி விட்டது. இப்படிப்பட்ட காலகட்டத்தில் காருண்ய நபியின் அந்த வழிகாட்டுதல் நமக்கு அதிகம் தேவையாக ஆகிவிட்டது! அதுதான் ஒரு முஸ்லிமை வழிபிறழ்தல்கள் மற்றும் தீய நடத்தைகளை விட்டும் தூரமாக்கும். “அல்லாஹ்வின் அடியார்களே! உறுதியுடன் இருங்கள்!” என நபி(ஸல்) கூறினார்கள். (முஸ்லிம்-2937)

(..يا عباد الله فاثبتوا...م/ ٢٩٣٧)

துன்பங்கள் மற்றும் சோதனைகளின் போதும் மாறி வரும் இவ்வுலகின் இன்பங்களும் பாலுணர்வுகளைத் தூண்டக்கூடிய விஷயங்களும் அதிகமாகும் போதும் உறுதியுடன் இருப்பது நேர்வழி பெற்ற அல்லாஹ்வின் அடியார்களின் அடையாளங்களில் ஒன்றாகும். உண்மையில் இந்தக் குழப்பங்கள் மு.்.மின்களைப் பொறுத்தவரையில் அவர்களைப் பக்குவப்படுத்தக் கூடியது என்பதையும், பராமுகமாகவும் அலட்சியமாகவும் இருப்பவர்களுக்கு சோதனை என்பதையும் நேர்வழி பெற்ற அந்த அடியார்கள் அறிந்தே வைத்துள்ளனர்.

இறைநம்பிக்கை கொண்ட மக்களின் இறைநம்பிக்கையை அத்துன்பங்கள் மாற்றிவிடாது. மாறாக அவர்கள் செல்கின்ற பாதை பாதுகாப்பானது என்ற திருப்தியையும் அவர்கள் செல்கின்ற வழிமுறையில் உறுதியுடன் இருப்பதன் முக்கியத்துவத்தையும் அவர்களுக்கு அதிகப் படுத்தவே செய்யும்.

﴿ الم، أَحَسِبَ النَّاسُ أَنْ يُتْرَكُوا أَنْ يَقُولُوا آمَنَّا وَهُمْ لَا يُفْتَنُونَ، وَلَقَدْ فَتَنَّا الَّذِينَ مِنْ قَبْلِهِمْ فَلَيَعْلَمَنَّ اللهُ الَّذِينَ صَدَقُوا وَلَيَعْلَمَنَّ الكَاذِبِينَ، ﴾ [العنكبوت:١-٣]

நம்பிக்கை கொண்டோம் என்று கூறியதன் காரணமாக சோதிக்கப்படாமல் விடப்படுவார்கள் என்று மனிதர்கள் எண்ணிக் கொண்டார்களா? அவர்களுக்கு முன் சென்றோரையும் சோதித்தோம். உண்மை பேசுவோரையும் அல்லாஹ் அறிவான். பொய் பேசுவோரையும் அறிவான். (அல்குர்ஆன் 29:2)

உறுதியாக இருப்பதன் கருத்து இது தான்: அதாவது மனிதன் தொடர்ந்து நேர்வழியில் நடைபோட வேண்டும். நற்செயல்களைத் தொடர்ந்து செய்து வர வேண்டும். மேலும் அவர்கள் இன்னும் அதிகம் செய்வதற்கு முனைப்பு காட்ட வேண்டும். அவனது இன்றைய தினம் நேற்றைய தினத்தை விடச் சிறந்ததாகவும் அவனது நாளைய தினம் இன்றைய தினத்தை விடச் சிறந்த தாகவும் இருப்பதற்கு அவன் தொடர்ந்து நல்லார்வம் காட்ட வேண்டும். அவனுடைய ஒவ்வொரு நாளும்

அவனை மறுமையின் பக்கம் நெருக்கி வைக்கின்ற வகையிலேயே நகர வேண்டும். என்றாலும் சிறிது காலங்கள் கடந்த பிறகு ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது உற்சாகமும் உத்வேகமும் குறைவதென்பது தவிர்க்க முடியாதது. ஆயினும் இறைநம்பிக்கையாளன் தனது மனத்துடன் தொடர்ந்து போராட வேண்டும். அவன் தொடர்ந்து நற்செயல்களைச் செய்வதிலும் மறுமையின் வெற்றிக்கும் ஈடேற்றத்திற்கும் முந்துவதிலும் பொறுமையுடன் இருக்க வேண்டும்.

﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اصْبِرُوا وَصَابِرُوا وَرَابِطُوا وَاتَّقُوا اللهَ لَعَلَّكُمْ تُفْلِحُونَ﴾

[آل عمران:٢٠٠]

நம்பிக்கை கொண்டோரே! பொறுமையை மேற்கொள்ளுங்கள்! பொறுமையில் (மற்றவர்களை) மிகைத்து விடுங்கள். உறுதியாக நில்லுங்கள்! அல்லாஹ்வை அஞ்சுங்கள்! வெற்றி பெறுவீர்கள்! (அல்குர்ஆன் 3:200)

﴿سَابِقُوا إِلَى مَغْفِرَةٍ مِنْ رَبِّكُمْ وَجَنَّةٍ عَرْضُهَا كَعَرْضِ السَّمَاءِ وَالأَرْضِ﴾ [الحديد:٢١]

உங்கள் இறைவனின் மன்னிப்பிற்கும் சொர்க்கத்திற்கும் முந்துங்கள்! அதன் பரப்பளவு வானம் மற்றும் பூமியின் பரப்பளவு போன்றது. (அல்குர்ஆன் 57:21)

என்னதான் மனிதன் சோர்ந்து போனாலும் ஒரு குறிப்பிட்ட நிலையை விட்டு அவன் கீழே இறங்கிவிடுவதை அல்லது அதில் குறைபாடு செய்வதை ஏற்க முடியாது. பாவங்களில் அவனது பாதம் சருக்கி விட்டால் உடனே

அவன் அதிலிருந்து மீண்டு அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடிக் கொள்ள வேண்டும்.

முஸ்லிம் தனது வாழ்க்கையில் சத்தியத்தில் நிலை குலையாதிருப்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழக்கூடிய வகையில் பல்வேறு வரலாற்று நிகழ்ச்சிகளை அல்லாஹ் குர்ஆனில் கூறியுள்ளான். இந்தப் பிரச்சனையின் முக்கியத்துவத்தை முஸ்லிம் உணர்ந்து கொள்ள வேண்டும் உன்பதற்காகத்தான். சான்றோர்களான நபித்தோழர்கள் மற்றும் தாபிஈன்களின் உயர்ந்த வாழ்க்கை நிலை நோக்கி மீண்டு வருவதற்காக முழு முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் அவற்றை அல்லாஹ் கூறியுள்ளான். இறைமார்க்கத்திலும் நல்லறம் புரிவதிலும் உறுதியுடன் நிலைகுலையாதிருப்பதன் முக்கியத்துவம் பின்வரும் விஷயங்களில் அமைந்துள்ளது.

முஸ்லிம்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் தற்கால சமூகச் சூழ்நிலை, விதவிதமான குழப்பங்கள், பாலுணர்வுகளைத் தூண்டும் விஷயங்கள், இவற்றின் நெருப்பைக் கொண்டு தங்களுக்குத் தாங்களே சூடு போட்டுக் கொள்கிறார்கள்! வகை வகையான சந்தேகங்களும் மன இச்சைகளும்; இவற்றின் காரணமாகத் தான் இறை மார்க்கம் அந்நியமாகிப் போயுள்ளது! அதைக் கடைப் பிடித்து வாழ்வோர் ஆச்சியத்திற்குரிய நிலையை - உவமையை அடைந்துள்ளனர். நபி(ஸல்)அவர்கள் கூறியது போல:

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ قَالَ قَالَ رَسُولُ الله ﷺ يَأْتِي عَلَى النَّاسِ زَمَانٌ الصَّابِرُ فِيهِمْ عَلَى دِينِهِ كَالْقَابِضِ عَلَى الجَمْرِ (ت/ ٢٢٦٠)

அதாவது "மக்களிடம் ஒரு காலம் வரும். அப்போது மார்க்கத்தைப் பேணுவதில் பொறுமையாய் இருப்பவர் நெருப்புக் கங்கைக் கையில் பிடித்திருப்பவரைப் போல் ஆகிவிடுவார். " (திர்மிதி 2260)

கடந்த காலத்தில் வாழ்ந்த முஸ்லிம்களை விட இன்றைய முஸ்லிம்களுக்குத்தான் சத்தியத்தில் நிலைத் திருப்பதற்கான வழிமுறைகள் அதிகம் தேவைப்படு கின்றன என்பதில் அறிவுடையோர் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. இவ்வுறுதியைப் பெறுவதற்கு கடுமையான உழைப்பு தேவைப்படுகிறது. காரணம் காலம் கெட்டுக்கிடக்கின்றது. உண்மையான சகோத ரர்கள் மிகவும் அரிதாக இருக்கிறார்கள். உதவக்கூடிய வர்கள் பலவீனமாகவும் ஒத்துழைக்கக்கூடியவர்கள் குறைவாகவும் இருக்கிறார்கள்.

## உறுதியாக இருப்பதற்கான சில வழிமுறைகள்

அல்லாஹ் தனது வேதத்திலும் தன்னுடைய நபியின் நாவின் மூலமாகவும் அவர்களுடைய வரலாற்றின் மூலமாகவும் மார்க்கத்தில் உறுதியாக இருப்பதற்கான அநேக வழிமுறைகளை நமக்குத் தெளிவுபடுத்தி இருப்பது அல்லாஹ் நமக்கு வழங்கிய அருட்கொடை

களில் ஒன்றாகும். அவற்றில் சிலவற்றை நாம் இங்கு தருகிறோம்.

## 1. திருக்குர்ஆனின் பக்கம் திரும்புதல்

உறுதியாக இருப்பதற்கான வழிமுறைகளில் முதலாவது திருக்குர்ஆன்தான். திருக்குர்ஆனைப் பலமாகப் பற்றிப் பிடித்துக் கொண்டவர்களை அல்லாஹ் (குழப்பங்களிலிருந்து) பாதுகாப்பான். அதனைப் பின்பற்று வோரை (தீமைகளிலிருந்து) காப்பாற்றுவான். அதன் பக்கம் மக்களை அழைப்போர் நேர்வழியின் பால் வழிகாட்டப்படுவர்.

இந்தத் திருக்குர்ஆன் படிப்படியாக சிறுகச் சிறுக இறக்கியருளப்பட்டதன் நோக்கமே மனதைச் சத்தியத்தில் நிலைத்திருக்கச் செய்வது தான் என்று அல்லாஹ் கூறி யிருக்கின்றான். நிராகரிப்பாளர்களின் ஆட்சேபணைக்குப் பதிலளிக்கும் விதத்தில் பின்வருமாறு கூறுகின்றான்:

﴿ وَقَالَ الَّذِينَ كَفَرُوا لَوْلَا نُزِّلَ عَلَيْهِ الْقُرْآنُ جُمْلَةً وَاحِدَةً كَذَلِكَ لِنُثَبِّتَ بِهِ فُؤَادَكَ وَرَتَّلْنَاهُ تَرْتِيلًا ، وَلَا يَأْتُونَكَ بِمَثَلٍ إِلَّا جِئْنَاكَ بِالْحَقِّ وَأَحْسَنَ تَفْسِيرًا ﴾

[ الفرقان : ٣٢،٣٣]

“இவர் மீது இந்தக் குர்ஆன் மொத்தமாக அருளப்படக் கூடாதா? என்று நிராகரிப்போர் கேட்கின்றனர். (நபியே!) இப்படித் தான் இதன் மூலம் உம் உள்ளத்தைப் பலப் படுத்திட சிறிது சிறிதாகவே அருளினோம். அவர்கள் உம்மிடம் எந்த உதாரணத்தைக் கூறினாலும் (அதை

விட) உண்மையானதையும் அழகிய விளக்கத்தையும் நாம் உமக்குக் கொடுக்காமலில்லை.” (25:32,33)

இதயத்தை உறுதிப்படுத்துவதற்கு அடிப்படையாக திருக்குர்ஆன் அமைந்திருப்பதற்குக் காரணம் என்ன?

◈ திருக்குர்ஆன் மனித உள்ளங்களில் ஈமானை விதைக்கிறது.

◈ அல்லாஹ்வுடனான மனிதனின் தொடர்பைப் பலப் படுத்துகிறது.

◈ இஸ்லாத்தின் விரோதிகளான நிராகரிப்பாளர்கள் மற்றும் நயவஞ்சகர்கள் எழுப்புகின்ற சந்தேகங்களுக்கு மறுப்புத் தருகின்றது.

◈ ஒழுக்க விழுமங்களையும் சீரிய போதனைகளை யும் முஸ்லிம்களுக்கு அளிக்கிறது. அந்த போதனைகள் அவர்களை சத்தியத்தை அறிந்தவர்களாக ஆக்குவ தோடு செல்லும் பாதை பாதுகாப்பானது என்ற உறுதி யையும் அவர்களுக்குத் தருகின்றது.

## 2. கல்வி

கல்வியறிவு இல்லாமல் நடப்பவர்கள் இருட்டில் நடப்பவர்களைப் போலாவர். இருட்டில் நடப்பவர்கள் ஆபத்துகளுக்கு ஆளாவர். சிலபோது அவர்களுக்கே தெரியாமல் வழியில் அவர்களுக்கு துன்பம் நேரலாம். இவ்வாறே கல்வியறிவு இல்லாதவர்கள் சந்தேகங்களிலும் மோகங்களிலும் பாலுணர்வுகளைத் தூண்டக்கூடிய விஷயங்களிலும் எளிதாக வீழ்ந்துவிடுவார்கள்.

கல்வியைத் தேடும் மாணவர்கள் பின்வரும் விஷயங்களைப் பேணி நடப்பது அவசியமாகும்.

✦ அல்லாஹ்வுக்காக என தூய எண்ணத்தை மேற்கொள்ள வேண்டும்.

✦ கல்வி தேடலின் மூலம் தனது அறியாமையை அகற்றும் எண்ணம் கொள்ள வேண்டும்.

✦ கல்வி தேடலின் மூலம் சமூகத்தின் அறியாமையை அகற்றிட நாட்டம் கொள்ள வேண்டும்.

✦ கல்வி தேடலின் மூலம் இஸ்லாமிய ஷரீஅத்தைப் பாதுகாக்கவும் அதற்கு வரும் ஆபத்தை தடுக்கவும் நாட்டம் கொள்ள வேண்டும்.

✦ கல்வி தேடலின் மூலம் சரியான இஸ்லாமியக் கொள்கை கோட்பாடுகளைப் பரவலாக்கிட நாடவேண்டும்

**3. ஷரீஅத்தைப் பற்றிப் பிடித்து வாழுதல், நல்ல அமல்களைச் செய்தல்**

﴿يُثَبِّتُ اللهُ الَّذِينَ آَمَنُوا بِالقَوْلِ الثَّابِتِ فِي الحَيَاةِ الدُّنْيَا وَفِي الآَخِرَةِ وَيُضِلُّ اللهُ الظَّالِمِينَ وَيَفْعَلُ اللهُ مَا يَشَاءُ﴾ [إبراهيم :٢٧]

நம்பிக்கை கொண்டோரை உறுதியான கொள்கையின் மூலம் இவ்வுலக வாழ்க்கையிலும் மறுமையிலும் அல்லாஹ் நிலைப்படுத்துகிறான். அநீதி இழைத்தோரை அல்லாஹ் வழிகேட்டில் விட்டு விடுகிறான். அல்லாஹ் நாடியதைச் செய்வான். (அல்குர்ஆன் 14:27)

இவ்வுலக வாழ்க்கையைப் பொறுத்து மு∴மின்களை நன்மையைக் கொண்டும் நற்செயல்களைக் கொண்டும் அல்லாஹ் உறுதிப்படுத்துகிறான். மறுமையிலோ அதாவது கப்ரிலோ இரண்டு வானவர்கள் அவர்களிடம் வந்து அவர்களின் இறைவனைப் பற்றியும் அவர்களின் மார்க்கத்தைப் பற்றியும் நபியைப் பற்றியும் கேட்கும் போது அதற்கு சரியான முறையில் பதிலளிப்பார்கள்.

﴿وَلَوْ أَنَّهُمْ فَعَلُوا مَا يُوعَظُونَ بِهِ لَكَانَ خَيْرًا لَهُمْ وَأَشَدَّ تَثْبِيتًا﴾ [النساء :٦٦]

“அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டபடி அவர்கள் செயல் பட்டிருந்தால் அது அவர்களுக்குச் சிறந்ததாகவும் (சத்தியத்தில் அவர்களை) நன்கு உறுதிப்படுத்தக்கூடிய தாகவும் இருந்திருக்கும்.” (அல்குர்ஆன் 4:66)

ஆம்! உண்மைதான்! இல்லையெனில் குழப்பங்கள் தலைதூக்கும்போது நற்செயல்கள் புரியாமல் சோம் பேறியாக இருப்பவர்களிடமிருந்து உறுதியை எதிர்பார்க்க முடியுமா என்ன?!

ஆனால் எவர்கள் ஈமான் கொண்டு நற்செயல்கள் புரிகின்றார்களோ அவர்களை அவர்களின் இரட்சகன் உறுதிப்படுத்துகிறான். இதனால்தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நற்செயல்களைத் தொடர்ந்து செய்ப வர்களாக இருந்தார்கள். நற்செயல்கள் குறைவாக இருந்தாலும் தொடர்ந்து செய்வது தான் அவர்களுக்கு மிகப் பிரியமாக இருந்தது.

## 4. நபிமார்களின் வரலாற்றைச் சிந்தித்தல், பின்பற்றி நடக்கும் நோக்கத்துடன் அவற்றை ஆய்வு செய்தல்

இதற்கு ஆதாரம் இந்த இறைவசனமாகும்:

﴿ وَكُلًّا نَقُصُّ عَلَيْكَ مِنْ أَنْبَاءِ الرُّسُلِ مَا نُثَبِّتُ بِهِ فُؤَادَكَ وَجَاءَكَ فِي هَذِهِ الْحَقُّ وَمَوْعِظَةٌ وَذِكْرَى لِلْمُؤْمِنِينَ ﴾ [هود:١٢٠]

(நபியே!) இறைத்தூதர்களின் வரலாறுகளிலிருந்து உமது உள்ளத்தைப் பலப்படுத்தக்கூடிய நிகழ்ச்சிகள் அனைத்தையும் உமக்குக் கூறுகிறோம். உண்மையும் அறிவுரையும் நம்பிக்கை கொண்டோருக்கு போதனையும் இவற்றில் உமக்குக் கிடைத்துள்ளன. (11:120)

இப்படிப்பட்ட வரலாறுகளைக் கூறும் வசனங்கள் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் விளையாட்டுக்காகவோ ரசனைக்காகவோ இறக்கியருளப்படவில்லை. மாறாக நபி (ஸல்) அவர்களின் உள்ளத்தையும் அத்துடன் முஃமின் களின் உள்ளங்களையும் உறுதிப்படுத்தும் உயர்ந்த நோக்கத்திற்காகத்தான் இறக்கியருளப்பட்டன.

## 5. பிரார்த்தனை

உறுதியை வழங்குமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்வது அவனுடைய அடியார்களான முஃமின்களின் பண்பாகும். உறுதியைப் பெறுவதற்கான காரணிகளில் பிரார்த்தனை மிக முக்கியமானதாகும். அவர்கள் செய்ய வேண்டிய பிரார்த்தனைகளில் சில:

﴿ رَبَّنَا لَا تُزِغْ قُلُوبَنَا بَعْدَ إِذْ هَدَيْتَنَا ﴾ [آل عمران :٨]

இறைவா! எங்களை நீ நேர்வழியில் செலுத்திய பின்பு எங்கள் இதயங்களை நேர்வழியிலிருந்து பிறழச் செய்துவிடாதே!. (அல்குர்ஆன் 3:8)

﴿ رَبَّنَا أَفْرِغْ عَلَيْنَا صَبْرًا وَثَبِّتْ أَقْدَامَنَا ﴾ [البقرة:٢٥٠]

இறைவா! நீ எங்களுக்கு பொறுமையைத் தந்தருள் வாயாக! எங்கள் பாதங்களை உறுதிப்படுத்துவாயாக! (அல்குர்ஆன் 2:250)

عَنْ أَنَسٍ قَالَ كَانَ رَسُولُ الله ﷺ يُكْثِرُ أَنْ يَقُولَ يَا مُقَلِّبَ الْقُلُوبِ ثَبِّتْ قَلْبِي عَلَى دِينِكَ (ت/ ٢١٤٠)

“உள்ளங்களைப் புரட்டக்கூடியவனே! என் உள்ளத்தை உனது மார்க்கத்தில் உறுதிப்படுத்துவாயாக.” (திர்மிதி 2140) என்று நபி(ஸல்) அவர்கள் அதிகமதிகம் பிரார்த் தனை செய்பவர்களாக இருந்தார்கள்.

### 6. அல்லாஹ்வை நினைவுகூர்தல்

அல்லாஹ்வை அதிகமதிகம் நினைவுகூர்வது உறுதி யைப் பெறுவதற்குரிய வழிமுறைகளில் மிகப் பயனுள்ள தாகும். மு.ஃமின்களில் உள்ளத்தில் மனவுறுதியை வெளிக்கொணர்வதில் இதற்கு மிகப் பெரிய தாக்கம் இருக்கிறது. ஏனெனில் அல்லாஹ்வை நினைவு கூரும் போது அவனுடனான தொடர்பு மிகவும் பலப்படுகிறது.

### 7. சரியான பாதையில் செல்வதற்கு ஆர்வம் காட்டுதல்

எவ்வாறெனில் முஸ்லிம்கள் மார்க்கத்தை சரியான முறையில் விளங்கிக் கொள்ள வேண்டும். திருக்குர் ஆனிலிருந்தும் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டுதல் களிலிருந்தும் தான் மார்க்கத்தை அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும். வழிகேடான சிந்தனைகள், தவறான கொள்கைகள் குறித்து எச்சரிக்கையாக இருந்து கொள்ள வேண்டும்.

((...فَإِنَّهُ مَنْ يَعِشْ مِنْكُمْ بَعْدِي فَسَيَرَى اخْتِلَافًا كَثِيرًا فَعَلَيْكُمْ بِسُنَّتِي وَسُنَّةِ الْخُلَفَاءِ الْمَهْدِيِّينَ الرَّاشِدِينَ تَمَسَّكُوا بِهَا وَعَضُّوا عَلَيْهَا بِالنَّوَاجِذِ وَإِيَّاكُمْ وَمُحْدَثَاتِ الْأُمُورِ فَإِنَّ كُلَّ مُحْدَثَةٍ بِدْعَةٌ وَكُلَّ بِدْعَةٍ ضَلَالَةٌ)) (د/ ٤٦٠٧، حم/ ١٦٥٢١)

அல்லாஹ்வின் தூதர்(ஸல்) கூறினார்கள்: உங்களில் எனக்குப் பின்னால் வாழக்கூடியவர்கள் ஏராளமான கருத்து வேறுபாடுகளைக் காண்பார்கள். அப்போது எனது வழிமுறையையும் நேர்வழிபெற்ற கலீபாக்களின் நடை முறையையும் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். அதனைக் கடவாய்ப் பற்களால் இறுகப் பிடித்துக்கொள்ளுங்கள். புதிதாகத் தோற்றுவிக்கப்படும் விஷயங்கள் குறித்து உங்களை எச்சரிக்கிறேன். ஏனெனில் புதிதாகத் தோற்று விக்கப்படும் விஷயங்கள் அனைத்தும் பித்அத்தாகும். எல்லா பித்அத்துகளும் வழிகேடாகும்.

அறிவிப்பவர்: இர்பாழ் பின் ஸாரியா(ரலி),

நூல்: அபூதாவூத்(4607), அஹ்மத்(16521)

## 8. பயிற்சி

ஈமான், கல்வி, விழிப்புணர்வு ரீதியிலான பயிற்சி, படிப் படியான பயிற்சி இவை யாவும் சத்தியத்தில் நிலைத் திருக்கத் தூண்டும் காரணிகளில் அடிப்படையானதாகும்.

**ஈமான் ரீதியான பயிற்சி**

இப்பயிற்சி அல்லாஹ்வைப் பற்றிய அச்சம், அவனை நேசித்தல், அவனிடத்தில் கூலியை எதிர்பார்த்தல் போன்ற வற்றின் மூலம் நம் உள்ளத்திற்கும் மனசாட்சிக்கும் புத்துயிரைக் கொடுக்கும்.

**கல்வி ரீதியான பயிற்சி**

இது சரியான ஆதாரத்தின் அடிப்படையில் அமையக் கூடிய பயிற்சி ஆகும். பிறரைப் பின்பற்றுதலுக்கும் காப்பி அடிப்பற்கும் முரணானதாகும்.

**விழிப்புணர்வு ரீதியான பயிற்சி**

இப்பயிற்சி குற்றம் புரிவோரின் வழியில் செல்லாமல் இஸ்லாத்தின் விரோதிகளின் சதித்திட்டங்களைப் புரிந்து, யதார்த்தத்தை நன்கு அறிந்து கொள்ளும் வகையில் அமையக்கூடியதாகும்.

**படிப்படியான பயிற்சி**

இப்பயிற்சி ஒரு முஸ்லிமை அவனது சக்தி மற்றும் திறமைக்கேற்ப படிப்படியாக உயர்வின் பால் கொண்டு செல்லக்கூடியதாகும். தகுந்த முன்னேற்பாடின்மை, அவசரப்படுதல், குறுக்கு வழியில் செல்லுதல் ஆகிய முறையில் அமையாதது.

இப்பயிற்சிகள் அனைத்தையும் சிறுவயதிலிருந்தே பேணி வர வேண்டும். ஏனெனில் அந்த வயதில் இளைஞர்கள் தூய்மையான, நல்லியல்புகளை ஏற்கின்ற உள்ளத்தைப் பெற்றிருப்பார்கள். நற்குணங்களையும் நல்ல பண்பாடுகளையும் அப்போது அவர்களிடம் எளிதில் விதைக்க முடியும். ஆயினும் இப்பயிற்சிகள் மனித உள்ளங்களின் தேவைகளுக்கும் தேட்டங்களுக்கும் ஏற்ற வகையில் இருக்க வேண்டும். மிகைபாடோ குறைபாடோ இன்றி இருக்க வேண்டும்.

உறுதிப்பாட்டிற்கான வழிமுறைகளில் ஒன்றான பயிற்சி எடுத்தல் என்ற இவ்வழிமுறையின் முக்கியத்துவத்தை நாம் அறிந்து கொள்வதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வரலாற்றின் பக்கம் திரும்ப வேண்டும். மக்காவில் காபிர்களின் துன்பங்களுக்கும் தொல்லை களுக்கும் ஆளான நபித்தோழர்களின் உறுதிக்கு அடிப்படையாக இருந்தது எது? நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடமிருந்து உறுதியான பயிற்சியைப் பெறாமல் உறுதிப்பாடு அவர்களுக்கு கிடைத்திருக்க முடியுமா? என்று நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டும்.

கப்பாப் பின் அரத் (ரலி) அவர்களை எடுத்துக் கொள்வோம். சத்தியத்தை ஏற்றதற்காக அவர்களின் எஜமானர்கள் இரும்புப் பாளங்களை நெருப்பில் பழுக்கக் காய்ச்சி அதில் அவர்களை வெற்றுடம்பாக தூக்கிப் போட்டார்களே! அந்நேரம் அவர்களுடைய முதுகிலுள்ள

கொழுப்பு உருகியபோது அதுதான் அந்நெருப்பை அணைத்தது. இவ்வனைத்தையும் தாங்கிக் கொண்டு அவர்களைப் பொறுமையுடன் இருக்கச் செய்தது எது?

அதுபோல பிலால் (ரலி) அவர்களை சுடுமணலில் கிடத்தி அவர்கள் மீது பெரும் பாராங்கல்லைத் தூக்கி வைத்து கடுமையாகத் துன்புறுத்தியபோதும், சுமையா (ரலி) அவர்களும் அவர்களது கணவரும் பிள்ளையும் கடும் துன்பங்களுக்கு ஆளானபோதும் அவர்களை நிலைகுலையாமல் இருக்கச் செய்தது எது?

சிறந்த பயிற்சி அத்தோழர்களுக்கு இல்லாதிருந்தால் அவர்களின் உள்ளத்தில் இறைநம்பிக்கை ஆழமாகவும் உறுதியாகவும் இடம்பிடித்திருக்க முடியுமா? என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

## 9. செல்கின்ற பாதை பற்றிய உறுதி

முஸ்லிம்களுக்கு தாம் செல்கின்ற பாதை சரியானது தான் என்ற நம்பிக்கை அதிகரிக்க அதிகரிக்க அப்பாதையில் அவர்கள் மிக உறுதியுடன் இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இந்த நம்பிக்கை அதிகரிப்பதற்கு சில வழிமுறைகள் உண்டு.

- நீங்கள் செல்கின்ற இந்நேரிய பாதையில் தான் உங்களுக்கு முன் நபிமார்கள், உயிர்த்தியாகிகள், சான்றோர்கள், உத்தமர்கள், மார்க்க அறிஞர்கள் ஆகியோர் சென்றார்கள் என்ற உணர்வு உங்களுக்கு வர வேண்டும். அப்படியானால் நீங்கள் இப்பாதையில்

அந்நியர்களாகவோ தனிமைப்படுத்தப்பட்டவர்களாகவோ இருக்க மாட்டீர்கள். மாறாக உங்கள் விரக்தி நீங்கி ஒரு பிரியம் ஏற்படும். உங்கள் கவலை சந்தோஷமாக மாறும். ஏனெனில் அந்த நபிமார்கள், நல்லோர்கள் யாவரும் இப்பாதையில் உங்கள் சகோதரர்களாக இருக் கின்றார்கள் என்ற உணர்வு உங்களுக்கு இருக்கின்றதே!

- மற்ற மனிதர்கள் மற்றும் ஏனைய படைப்புகளுக்கு மத்தியில் அல்லாஹ் உங்களைத் தேர்ந்தெடுத்து உங்களுக்குச் சிறப்பை வழங்கியுள்ளான் என்ற உணர்வும் உங்களுக்கு வர வேண்டும்.

﴿ قُلِ الحَمْدُ لله وَسَلَامٌ عَلَى عِبَادِهِ الَّذِينَ اصْطَفَى ﴾ [النمل:٥٩]

(நபியே!) நீர் கூறும்: புகழ் அனைத்தும் அல்லாஹ் வுக்கே உரியதாகும். அவன் தேர்ந்தெடுத்த அவனுடைய அடியார்கள் மீது சாந்தி உண்டாவதாக! (27:59)

- அல்லாஹ் உங்களை இறைமறுப்பாளர்களாகவோ அல்லது பித்அத்தின் பக்கம் அழைப்பவர்களாகவோ அல்லது தீயவர்களாகவோ படைத்திருந்தால் உங்கள் உணர்வு எப்படி இருந்திருக்கும்? என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

- இதையும் நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதாவது மற்ற எல்லோரை விடவும் அல்லாஹ் உங்களை சிறந்தவர்களாகத் தேர்ந்தெடுத்து நபிகள் நாயகம்(ஸல்) அவர்களும் நபித்தோழர்களும் சென்ற

சத்தியப் பாதையில் உங்களை வழிநடத்திச் செல்கின் றான் என்ற உணர்வே உங்களுடைய வழியில் நீங்கள் உறுதியாக இருப்பதற்கான ஒரு வழிமுறைதானே!

## 10. அழைப்புப் பணியில் ஈடுபடுதல்

உள்ளம் செயல்படவில்லையெனில் அது மாசுபட்டு விடும். எனவே உள்ளம் செயல்படுவதற்குச் சிறந்த களம் அல்லாஹ்வின் பக்கம் (மக்களை) அழைத்துக் கொண் டிருப்பதாகும். இப்பணி இறைத்தூதர்களின் பணியாகும். உங்கள் உள்ளத்தை இறைவழியில் நீங்கள் ஈடுபடுத்த வில்லையெனில் அது உங்களைப் பாவத்தில் ஈடுபடுத்தி விடும். ஈமான் அதிகரிக்கவும் செய்யும் குறையவும் செய்யும். வழிபாடுகளைச் செய்வதால் ஈமான் அதிக ரிக்கும். பாவங்கள் புரிவதால் ஈமான் குறையும்.

அழைப்புப் பணிக்கு மகத்தான கூலி இருப்பதுடன் அது நிலைகுலையாமைக்கான சாதனங்களுள் ஒன்றா கவும் இருக்கிறது.ஏனெனில் போர்க்களத்தில் முன்னேறிச் சென்று தாக்கக்கூடியவனுக்கு தற்காப்பு என்ன வேண்டிக் கிடக்கிறது? (அதுபோல அழைப்புப் பணியே உறுதிப் பாட்டிற்கு உத்தரவாதமாகும்.) அல்லாஹ் அழைப்பாளர் களுடன் இருக்கின்றான். அவர்களை அவன் உறுதிப் படுத்துகின்றான். அவர்கள் எடுத்து வைக்கும் எட்டுக் களைச் சீராக்குகின்றான். அழைப்பாளன் மருத்துவரைப் போலாவான். தனது அறிவால், திறமையால் நோயுடன்

போராடுகின்றான். இந்த அழைப்புப் பணிக்கு கிடைக்கக் கூடிய கூலி மகத்தானது என்பதற்கு பின்வரும் அல்லாஹ் வுடைய கூற்று சான்றாக இருக்கிறது.

﴿ وَمَنْ أَحْسَنُ قَوْلًا مِمَّنْ دَعَا إِلَى اللهِ وَعَمِلَ صَالِحًا وَقَالَ إِنَّنِي مِنَ الْمُسْلِمِينَ ﴾

[فصِّلت :٣٣]

யார் அல்லாஹ்வின் பக்கம் அழைத்தாரோ, நற்செயல் புரிந்தாரோ, மேலும் நான் (இறைவனுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்த) முஸ்லிம்களில் ஒருவனாகவும் இருக்கிறேன் என்று கூறினாரோ அவரை விட அழகிய வார்த்தை கூறுபவர் யார்? (அல்குர்ஆன் 41:33)

((...لَأَنْ يُهْدَى بِكَ رَجُلٌ وَاحِدٌ خَيْرٌ لَكَ مِنْ حُمْرِ النَّعَمِ)) (خ/ ٢٩٤٢)

“உன் மூலம் அல்லாஹ் ஒரு மனிதருக்கு நேர்வழி காட்டுவது செந்நிற ஒட்டகங்களை விட உனக்குச் சிறந்த தாகும்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஸஹ்ல் பின் ஸஅத்(ரலி), புகாரி(2942)

## 11. உறுதிப்பாட்டை ஏற்படுத்தும் சக்திகளையே சூழ்ந்திருப்பது.

இப்படிப்பட்ட சக்திகளின் குண அம்சங்கள் பற்றியே நபி(ஸல்)அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள்:

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ : إِنَّ مِنْ النَّاسِ

مَفَاتِيحَ لِلْخَيْرِ مَغَالِيقَ لِلشَّرِّ ... (جه/ ٢٣٧)

“மக்களில் சிலர் நன்மைகளின் திறவு கோல்களாகவும் தீமைகளின் பூட்டுக்களாகவும் திகழ்கின்றார்கள்.” அறிவிப்பவர்: அனஸ் (ரலி), நூல்: இப்னுமாஜா

எனவே வாய்மையான உலமாக்கள், நலம் நாடும் சகோதரர்கள் ஆகியோரைத் தேடிச் செல்வதும் அவர் களின் அவையில் அமர்வதும் சத்தியத்தில் நிலைத் திருப்பதற்கான முக்கியக் காரணியாகும்.

ஏனெனில் நல்லோர்களாகவும் வாழக்கை முன்மாதிரி களாகவும் நற்பயிர்ச்சி அளிப்பவர்களாகவும் உள்ள உங்கள் சகோதரர்கள் தான் -அல்லாஹ்வுக்குப் பிறகு- சத்தியப் பாதையில் உங்களுக்கு உதவியாக இருப் பார்கள். அவர்களிடமுள்ள திருக்குர்ஆன் வசனங்கள் மற்றும் சட்ட நுட்பங்கள் மூலம் உங்களைப் உறுதிப் படுத்துவார்கள். எனவே அவர்களைப் பற்றிப் பிடித்துக் கொண்டு அவர்களுடன் இணைந்து வாழுங்கள். மேலும் அல்லாஹ்வை நினைவுகூர்கின்ற சபைகளின் சிறப்பை அடையாமல் இருந்துவிடாதீர்கள். தனிமை குறித்து உங்களை எச்சரிக்கை செய்கிறேன். ஏனெனில் நீங்கள் தனிமையில் இருந்தால் ஷைத்தான்கள் உங்களை இராஞ்சிச் கொண்டு போய்விடுவார்கள். தனிமையில் மேயும் ஆட்டைத்தானே ஓநாய் கபளிகரம் செய்கின்றது.

## 12. இறையுதவியையும், எதிர்காலம் இஸ்லாத்திற்கே என்பதையும் உறுதியாக நம்புதல்

﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا إِنْ تَنْصُرُوا اللهَ يَنْصُرْكُمْ وَيُثَبِّتْ أَقْدَامَكُمْ﴾ [محمد:٧]

நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வுக்கு உதவினால் அவன் உங்களுக்கு உதவுவான். மேலும் உங்கள் பாதங்களை அவன் உறுதிப்படுத்துவான். (47:7)

﴿إِنَّ اللهَ يُدَافِعُ عَنِ الَّذِينَ آمَنُوا﴾ [الحج:٣٨]

நம்பிக்கை கொண்டோருக்கு அல்லாஹ் பாதுகாப்பு அளிக்கிறான். (அல்குர்ஆன் 22:38)

﴿اللهُ وَلِيُّ الَّذِينَ آمَنُوا...﴾ [البقرة:٢٥٧]

நம்பிக்கை கொண்டோருக்கு அல்லாஹ் உதவுபவன். (அல்குர்ஆன் 2:257)

## 13. அசத்தியத்தின் உண்மை நிலையை அறிதலும் ஏமாற்றம் அடையாதிருத்தலும்

﴿لَا يَغُرَّنَّكَ تَقَلُّبُ الَّذِينَ كَفَرُوا فِي الْبِلَادِ، مَتَاعٌ قَلِيلٌ ثُمَّ مَأْوَاهُمْ جَهَنَّمُ وَبِئْسَ الْمِهَادُ﴾. [آل عمران:١٩٦،١٩٧].

அல்லாஹ் கூறுகிறான்: நிராகரிப்பாளர்கள் ஊர்கள் தோரும் (சொகுசாகத்) திரிவது உம்மை ஏமாற்றத்தில் ஆழ்த்தி விட வேண்டாம். இது அற்ப இன்பம்தான். பிறகு அவர்கள் சேருமிடம் நரகமே! தங்குமிடத்தில் அது கெட்டது! (அல்குர்ஆன் 3:196,197)

இவ்வசனம் அசத்தியவாதிகளிடமுள்ள கொள்கைகள், அதற்காக அவர்களுக்குக் கிடைக்கும் சுகபோகங்கள்,

அவர்கள் அடைந்த உயர்வுகள் ஆகியவை குறித்து மு.ஃ.மின்கள் ஏமாற்றமடைவதை எச்சரிக்கிறது. அவர்கள் எப்படி இருந்தாலும் அவர்கள் சேருமிடம் நரகம் தான்! ஒதுங்குமிடத்தில் அது மிகக் கெட்டது! அது மட்டுமல்ல, இவ்வுலக வாழ்க்கையின் இன்பங்கள் அழிந்து போகக் கூடியதே! உண்மையான மு.ஃ.மின்களுக்காக சொர்க் கத்தில் அல்லாஹ் தயாரித்து வைத்துள்ள இன்பங் களுக்கு அவை ஈடாகாது.

## 14. உறுதிப்பாட்டிற்கு உதவும் நற்குணங்களைக் கடைபிடித்தல்

இவற்றில் தலையாயது பொறுமை. ஆதாரப்பூர்வமான நபிமொழியில் பின்வருமாறு வந்துள்ளது.

((وَمَا أُعْطِيَ أَحَدٌ عَطَاءً خَيْرًا وَأَوْسَعَ مِنْ الصَّبْرِ)) (خ/ ١٤٦٩، م/ ١٠٥٣)

“பொறுமையை விடச் சிறந்த விசாலமான வெகுமதி யாருக்கும் வழங்கப்படவில்லை” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஸயீத் (ரலி),

நூல்: புகாரி(1469), முஸ்லிம்(1053)

## 15. சான்றோரின் அறிவுரை

நல்லோர்களிடமிருந்து அறிவுரைகளைக் கேட்டுப் பெறுவதில் ஆர்வம் கொள்ளுங்கள் சகோதரர்களே! அப்படிப்பட்ட அறிவுரைகள் கூறப்பட்டால் அவற்றை மனதில் இருத்திக் கொள்ளுங்கள்.

◈ பயணத்தில் ஏதாவது கஷ்டங்கள் நிகழ்ந்துவிடும் என்று நீங்கள் அஞ்சினால் முன்னதாக நல்லோர்களின் அறிவுரைகளைத் தேடிக்கொள்ளுங்கள்.

◈ சோதனைகள் ஏற்படும்போதும் அல்லது நீங்கள் எதிர்பார்க்கின்ற சோதனைகள் ஏற்படும் முன்பும் நல்லோர்களின் அறிவுரைகளைத் தேடிக்கொள்ளுங்கள்.

◈ ஏதேனும் ஒரு பதவியில் நீங்கள் அமர்த்தப் பட்டாலோ அல்லது வாரிசு சொத்தோ செல்வமோ உங்களுக்கு வழங்கப்பட்டலோ அப்போதும் நல்லோர் களின் அறிவுரைகளைத் தேடிக்கொள்ளுங்கள். இது போன்ற சந்தர்ப்பங்களில் உங்களையும் மற்றவர் களையும் நீங்கள் உறுதிப்படுத்துங்கள். அல்லாஹ் மு..மின்களுக்கு உதுவுபவனாக இருக்கின்றான்.

## 16. சொர்க்கத்தின் இன்பத்தையும் நரகத்தின் துன்பத்தையும் சிந்தித்தலும், மரணத்தை நினைவு கூருதலும்

சொர்க்கம் என்பது கவலைகளைப் போக்கி மகிழ்ச்சி யையும் இன்பத்தையும் தரக்கூடிய இடமாகும். நம்பிக்கை கொண்டோரின் பயணத்தின் கடைசி எல்லையாகும். தியாகங்களில் ஈடுபடாமல் நற்செயல்களைச் செய்யாமல் எதிலும் உறுதியில்லாமல் இருப்பதே மனித உள்ளத்தின் இயல்பு. ஆனால் அந்தத் தியாகங்களுக்கு ஏதேனும் பிரதி பலன் கிடைத்தால் தியாகம் செய்ய மனம் ஒப்பும். அந்தப் பிரதிபலன் சிரமங்களை மனதிற்கு எளிதாக்கும். மேலும்

பாதையில் கிடக்கும் தடைகளையும் சிரமங்களையும் லேசாக்கும்.

எனவே ஒரு செயலுக்குரிய கூலியைத் தெரிந்து கொள்பவனுக்கு அச்செயலிலுள்ள சிரமம் இலகுவாகி விடும். தொடர்ந்து செயல்படுவான். நாம் இவற்றில் உறுதியாக இல்லையெனில் வானங்கள் மற்றும் பூமி அளவுக்கு விசாலமான சொர்க்கம் நமக்குக் கிடைக் காமல் போய்விடும் என்பதைப் புரிந்துகொள்வான்.

அதுபோல மரணத்தை நினைவுகூருவது ஒரு முஸ்லி மைத் தடம் புரண்டுவிடாமல் பாதுகாப்பதோடு அல்லாஹ் விதித்த வரம்புகளில் அவனை நிலைநிறுத்துகிறது. அவற்றை அவன் மீற மாட்டான். ஏனெனில் அவன் தன்னுடைய கடைசி நேரம் இன்னும் சில நொடிகளில் வந்துவிடும் என்பதை அறிந்து கொண்டால் அவன் மார்க்கத்திலிருந்து தடம் புரண்டுவிடவோ அல்லது அசத்தியத்தில் பிடிவாதமாக இருக்கவோ அவனது உள்ளம் எங்ஙனம் தூண்டும்?

قَالَ رَسُولُ اللهِ ﷺ أَكْثِرُوا ذِكْرَ هَاذِمِ اللَّذَّاتِ يَعْنِي الْمَوْتَ (ت/ ٢٣٠٧)

இதனால் தான் நபி (ஸல்) அவர்கள் “இன்ப நுகர்வு களைத் தகர்க்கக்கூடியதை அதாவது மரணத்தை அதிக மதிகம் நினைவுகூருங்கள்” எனக் கூறியுள்ளார்கள். (திர்மிதி-2307)

## சத்தியத்தில் நிலைத்து நிற்க வேண்டிய சந்தர்ப் பங்கள்

### 1. சோதனையின் போது

சத்தியத்தில் உறுதியாக இருப்பதன் வடிவங்களில் ஒன்று சோதனைகளின்போது உறுதியாக இருப்பதாகும். பொறுமையை மேற்கொள்ள வேண்டிய காலகட்டங்களில் உறுதியாக இருப்பதாகும். அந்தச் சூழ்நிலைகளில் பொறுமையை மேற்கொள்பவர் ஐம்பது நபித்தோழர் களின் கூலிக்குத் தகுதி பெறுகிறார். இது சோதனை களின்போது அவர் நிலைகுலையாமல் இருக்கும்போது அவருக்குக் கிடைக்கக்கூடிய மகத்தான நன்மையைக் கருத்தில் கொண்டதாகும்.

(( إن من ورائكم أيام الصبر ، للمتمسك فيهن يومئذ بما أنتم عليه

أجر خمسين منكم . قالوا : يا نبي الله ! أو منهم ؟ قال : بل منكم ))

(السلسلة الصحيحة للألباني / ٤٩٤)

“உங்களுக்குப் பின்னால் பொறுமையை மேற்கொள்ள வேண்டிய காலங்கள் ஏற்படும். அந்த நேரத்தில் நீங்கள் (இப்போது) எந்த வழியில் இருக்கின்றீர்களோ அந்த வழியைப் பற்றிப் பிடிப்பவருக்கு உங்களில் ஐம்பது பேரின் கூலி உண்டு” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். “அல்லாஹ்வின் தூதரே! அவர்களில் ஐம்பது பேரின் கூலி இல்லையா? என்று தோழர்கள் கேட்கவும், இல்லை!

உங்களில் ஐம்பது பேரின் கூலி! என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஸில்ஸிலதுஸ் ஸஹீஹா-494)

## சோதனைகளின் வகைகளில் சில:

### செல்வம், பதவி

இவ்விரு சோதனைகளின் அபாயத்தைப் பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறும்போது

عَنْ كَعْبِ بْنِ مَالِكٍ قَالَ قَالَ رَسُولُ الله ﷺ مَا ذِئْبَانِ جَائِعَانِ أُرْسِلَا فِي غَنَمٍ بِأَفْسَدَ لَهَا مِنْ حِرْصِ الْمَرْءِ عَلَى الْمَالِ وَالشَّرَفِ لِدِينِهِ (ت/ ٢٣٧٦)

"ஒரு மனிதன் பதவிக்கும் பொருளுக்கும் பேராசைப் படுவது ஆடுகளிடையே அனுப்பப்பட்ட பசியுள்ள இரண்டு ஓநாய்களை விடவும் அவனது மார்க்கத்திற்கு மிகவும் ஆபத்தானது." என்று கூறியுள்ளார்கள். (திர்மிதி-2376)

### மனைவி, குழந்தைகளின் சோதனை

﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا إِنَّ مِنْ أَزْوَاجِكُمْ وَأَوْلَادِكُمْ عَدُوًّا لَكُمْ فَاحْذَرُوهُمْ﴾

[التغابن:١٤]

நம்பிக்கை கொண்டோரே! உங்கள் மனைவியரிலும் உங்கள் மக்களிலும் உங்களுக்கு எதிரிகள் உள்ளனர். அவர்களிடம் கவனமாக இருந்து கொள்ளுங்கள். (அல்குர்ஆன் 64:14)

### கொடுமை, அநீதி, அக்கிரமத்தின் சோதனை, முஸ்லிம்களை அவர்களது மார்க்கத்தை விட்டும் தடுக்கப்படுவதன் சோதனை

**தஜ்ஜாலுடைய குழப்பம்**

நபி(ஸல்)அவர்கள் தஜ்ஜாலுடைய குழப்பம் குறித்து நம்மை எச்சரித்துள்ளார்கள். தஜ்ஜாலுடைய குழப் பத்திற்கு நாம் ஆளாகும்போது நிலைகுலையாமல் உறுதியுடன் இருக்க வேண்டும் என்றும் அவனிடம் குவிந்திருக்கும் ஆற்றல்களைக் கண்டு ஏமாந்துவிடக் கூடாது என்றும் அறிவுறுத்தியுள்ளார்கள்.

((فَمَنْ رَآهُ مِنْكُمْ فَلْيَقْرَأْ عَلَيْهِ فَوَاتِحَ سُورَةِ الْكَهْفِ إِنَّهُ يَخْرُجُ مِنْ خَلَّةٍ بَيْنَ الشَّامِ وَالْعِرَاقِ فَعَاثَ يَمِينًا وَعَاثَ شِمَالًا يَا عِبَادَ اللَّهِ اثْبُتُوا ))

(م/ ٢٩٣٧، جه/ ٤٠٧٥)

“உங்களில் அவனைக் காண்பவர் கஹ்.:.ப் அத்தியா யத்தின் ஆரம்ப வசனங்களை ஓதிக்கொள்ளட்டும். அவன் சிரியாவுக்கும் இராக்கிற்கும் இடையிலுள்ள ஒரு பகுதி யிலிருந்து வெளியேறுவான். வலது பக்கமும் இடது பக்கமும் குழப்பங்களை விளைவிப்பான். எனவே அல்லாஹ்வின் அடியார்களே! உறுதியாக இருங்கள்” என நபி(ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: நவாஸ் பின் ஸம்ஆன்(ரலி), நூல்: முஸ்லிம்(2937), இப்னுமாஜா(4075)

இந்த உறுதிக்கு நபி(ஸல்) அவர்கள் ஓர் உதாரணம் கூறினார்கள். தஜ்ஜாலுடைய குழப்பத்திற்கு முன்னால் நிலைகுலையாமல் இருக்கக்கூடிய நம்பிக்கை கொண்ட ஒரு மனிதரைப் பற்றி உண்மையான (இறைச்) செய்தியின் மூலம் நமக்கு அறிவிக்கும்போது இதைக்

கூறினார்கள். அந்நேரத்தில் உறுதியான நம்பிக்கை அவருடைய ஆயுதமாக இருக்கும். இது பற்றி நபிமொழித் தொகுப்பான புகாரியில் இவ்வாறு வந்துள்ளது:

عن أَبِي سَعِيدٍ الْخُدْرِيَّ عن رَسُولُ الله ﷺ قَالَ يَأْتِي الدَّجَّالُ وَهُوَ مُحَرَّمٌ عَلَيْهِ أَنْ يَدْخُلَ نِقَابَ الْمَدِينَةِ بَعْضَ السِّبَاخِ الَّتِي بِالْمَدِينَةِ فَيَخْرُجُ إِلَيْهِ يَوْمَئِذٍ رَجُلٌ هُوَ خَيْرُ النَّاسِ أَوْ مِنْ خَيْرِ النَّاسِ فَيَقُولُ أَشْهَدُ أَنَّكَ الدَّجَّالُ الَّذِي حَدَّثَنَا عَنْكَ رَسُولُ الله ﷺ حَدِيثَهُ فَيَقُولُ الدَّجَّالُ أَرَأَيْتَ إِنْ قَتَلْتُ هَذَا ثُمَّ أَحْيَيْتُهُ هَلْ تَشُكُّونَ فِي الْأَمْرِ فَيَقُولُونَ لَا فَيَقْتُلُهُ ثُمَّ يُحْيِيهِ فَيَقُولُ حِينَ يُحْيِيهِ وَالله مَا كُنْتُ قَطُّ أَشَدَّ بَصِيرَةً مِنِّي الْيَوْمَ فَيَقُولُ الدَّجَّالُ أَقْتُلُهُ فَلَا أُسَلَّطُ عَلَيْهِ (خ/ ١٨٨٢)

தஜ்ஜால் வருவான். மதீனாவின் வாசல்களில் நுழைவது அவனுக்குத் தடுக்கப்பட்டிருக்கும். மதீனாவை அடுத்து (சிரியாவை நோக்கிய) சில உவர்நிலப் பகுதி களில் அவன் தங்குவான். அன்று மக்களில் சிறந்த ஒரு மனிதர் அவனிடம் வந்து, “அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எங்களுக்கு சொல்லிவிட்டுச் சென்ற தஜ்ஜால் நீ தான் என்று நான் சாட்சி சொல்கிறேன்” என்று கூறுவார். அதற்கு தஜ்ஜால் (மக்களிடம்), “இவரை நான் கொன்று விட்டு மீண்டும் உயிர்ப்பித்தால் என் விஷயத்தில் நீங்கள் சந்தேகம் கொள்வீர்களா?” என்று கேட்பான். அவர்கள் “கொள்ள மாட்டோம்” என்பார்கள். பிறகு தஜ்ஜால் அவரைக் கொலை செய்துவிட்டு மீண்டும் உயிர்ப் பிப்பான். அவர் உயிர்ப்பிக்கப்படும் போது, “இன்றைய

தினம் நான் மிகத் தெளிவாக உன்னைப் பற்றி அறிந்தது போல் (இதற்கு முன்) ஒருபோதும் அறிந்திருக்கவில்லை” என்று கூறுவார். உடனே தஜ்ஜால், “இவரை மீண்டும் கொல்வேன்” என்று கூறுவான். அவரைக் கொல்ல அவனால் முடியாது. (புகாரி-1882)

**2. அறப்போராட்டத்தின்போது**

உண்மையான இறைநம்பிக்கையாளர்களின் உறுதிப் பாடு இப்படித்தான் இருக்கும். அதாவது போர்க்களத்தில் அல்லாஹ்வின் எதிரிப்படைகளுடன் அவர்கள் மோதும் போது வாட்களின் வீச்சுக்களும் மரண ஓலங்களும் சத்தியத்தின் மீதான உறுதியைத்தான் அவர்களுக்கு அதிகப்படுத்தும். தியாகத்தையும் ஏக இறைவனுக்கு முன்னிலையில் தம்மை முழுமையாக ஒப்படைத்திடும் உணர்வைத்தான் அவர்களுக்கு அதிகப்படுத்தும். அப்போது அல்லாஹ்வின் உதவியையும் மன்னிப்பையும் எதிர்பார்த்தவர்களாகவே அவர்கள் இருப்பார்கள்.

﴿وَكَأَيِّنْ مِنْ نَبِيٍّ قَاتَلَ مَعَهُ رِبِّيُّونَ كَثِيرٌ فَمَا وَهَنُوا لِمَا أَصَابَهُمْ فِي سَبِيلِ اللهِ وَمَا ضَعُفُوا وَمَا اسْتَكَانُوا وَاللهُ يُحِبُّ الصَّابِرِينَ، وَمَا كَانَ قَوْلَهُمْ إِلَّا أَنْ قَالُوا رَبَّنَا اغْفِرْ لَنَا ذُنُوبَنَا وَإِسْرَافَنَا فِي أَمْرِنَا وَثَبِّتْ أَقْدَامَنَا وَانْصُرْنَا عَلَى القَوْمِ الكَافِرِينَ﴾.

[آل عمران:١٤٦،١٤٧].

எத்தனையோ நபிமார்(களும் அவர்) களுடன் சேர்ந்து எவ்வளவோ இறைபக்தர்களும் போரிட்டுள்ளனர். அல்லாஹ்வின் பாதையில் அவர்களுக்கு ஏற்றபட்ட

(துன்பத்) திற்காக அவர்கள் தளர்ந்து விடவில்லை. பலவீனப்படவுமில்லை. பணிந்து விடவுமில்லை. சகித்துக் கொள்வோரை அல்லாஹ் விரும்புகிறான். “எங்கள் இறைவா! எங்கள் பாவங்களையும் எங்கள் காரியங் களில் நாங்கள் வரம்பு மீறியதையும் மன்னிப்பாயாக! எங்கள் பாதங்களை உறுதிப்படுத்துவாயாக! (உன்னை) மறுக்கும் கூட்டத்திற்கு எதிராக எங்களுக்கு உதவு வாயாக!” என்பதே அவர்களின் வேண்டுதலாக இருந்தது. (அல்குர்ஆன் 3:146,147)

இவ்வாறு தான் உறுதிமிக்கவர்கள் இருப்பார்கள். துன்பம் எனும் சூராவளி அவர்களை சாய்த்துவிடாது. ஏனைய பலவீனமான ஈமான் உடையவர்களைச் சாய்ப்பது போல! அல்லாஹ் கூறுகிறான்:

﴿وَلَمَّا بَرَزُوا لِجَالُوتَ وَجُنُودِهِ قَالُوا رَبَّنَا أَفْرِغْ عَلَيْنَا صَبْرًا وَثَبِّتْ أَقْدَامَنَا وَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكَافِرِينَ﴾ [البقرة:٢٥٠]

ஜாலுத்தையும் அவனது படையினரையும் அவர்கள் களத்தில் சந்தித்தபோது “எங்கள் இறைவா! எங்கள் மீது பொறுமையைப் பொழிவாயாக! எங்கள் பாதங்களை நிலைப்படுத்துவாயாக! (உன்னை) மறுக்கும் கூட்டத்திற்கு எதிராக எங்களுக்கு உதவுவாயாக!” என்றனர். (2:250)

எனவே இந்தப் பொறுமை மற்றும் உறுதியின் விளைவு இவ்வுலகில் அவர்களுக்கு நற்பாக்கியமாக இருப்பதோடு மறுவுலகில் நற்கூலியையும் அவர்கள் எதிர்பார்க்க முடியும்.

**3. இலட்சியத்தில் உறுதியுடன் இருத்தல்**

உண்மையான முஸ்லிம் யாரெனில், இஸ்லாத்தின் போதனைகளை (வாழ்க்கையில்) நடைமுறைப்படுத்து வதற்கு முழுமையாக ஆர்வம் காட்டுவார். பித்அத்துகள் எனும் புது அனுஷ்டானங்களை விடுவதற்கும் பாவங் களையும் வீண், விளையாட்டுகளையும் விட்டொழிப் பதற்கும் எவ்வாறு ஆர்வம் காட்டுவாரோ அவ்வாறு! மேலும் அல்லாஹ்வின் உதவியால் வெற்றியாளர்களின் கூட்டத்தில் ஒருவராய் ஆகும் பொருட்டு நபிவழியையும் கடைபிடித்து வாழ்வார். பித்அத்துகளின் பக்கம் அழைப் போர் ஏராளம் உள்ளனர். குறிப்பாக இந்தக் காலத்தில் அவர்களின் எண்ணிக்கை அதிகம் உள்ளது! அவர்கள் பித்அத்துகளை இறைமார்க்கத்துடன் இணைத்துவிடுகின் றனர். ஆனால் அல்லாஹ்வின் மார்க்கம் பரிபூரணமானது! அதில் எந்தக் குறையும் இல்லை என்பதை ஏனோ அவர்கள் அறியவில்லை! எனவே மார்க்கத்தில் பித்அத்து களைச் செய்வதை விட்டும் ஒரு முஸ்லிம் எச்சரிக்கை யாக இருக்க வேண்டும்.

**4. மரணதருவாயில் உறுதியுடன் இருத்தல்**

மரண வேதனை மிகக் கடுமையாக இருக்கும் நேரத்தில் நிராகரிப்பாளர்களும் பாவிகளும் உறுதியுடன் இருக்கும் பாக்கியத்தை இழந்து விடுகின்றனர். அதனால் தான் மரண தருவாயில் அவர்களால் ஏகத்துவக்

கலிமாவை மொழிய முடிவதில்லை. இது தீய முடிவின் அடையாளமாகும்.

عَنْ مُعَاذِ بْنِ جَبَلٍ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ مَنْ كَانَ آخِرُ كَلَامِهِ لَا إِلَهَ إِلَّا اللهُ دَخَلَ الْجَنَّةَ (د/ ٣١١٦)

"எவருடைய கடைசி வார்த்தை லாயிலாஹ இல்லல் லாஹ் வாக இருக்குமோ அவர் நிச்சயம் சொர்க்கம் செல்வார்" என்று நபி(ஸல்)அவர்கள் கூறியுள்ளார்கள். (அபுதாவூத்-3116)

இக்கலிமாவை மொழியக்கூடிய பாக்கியம் உண்மை யான இறைநம்பிக்கையாளர்களுக்கே கிடைக்கும்.

**இதோ தீய முடிவுக்குச் சில எடுத்துக்காட்டுகள்:**

மரணதருவாயில் சிலரிடம் லாயிலாஹ இல்லல் லாஹ் என்று சொல்லுமாறு கூறப்பட்டால் அவர்கள் வலது புறமும் இடது புறமும் தலையை அசைப்பார்களே தவிர அதனை மொழியமாட்டார்கள். சிலர் "இது நல்ல நிலம்! இது மலிவாகக் கிடைக்குமே!" எனக் கூறுவார்கள். இன்னும் சிலர் அந்நேரத்தில் ஜெஸ் காய்களின் பெயர்களை நினைவுகூருவார்கள். மற்றும் சிலரோ சில ராகங்களை அல்லது பாடல் வரிகளைப் பாடுவார்கள். அல்லது தம் காதலியை நினைவுகூருவார்கள்.

இந்த நிலை ஏற்படுவதற்குக் காரணம் இதுபோன்ற விஷயங்கள் தான் உலகில் அல்லாஹ்வை நினைவு கூருவதை விட்டும் அவர்களைத் திசை திருப்பிவிட்டன.

எனவே ஏகத்துவக் கலிமாவை மொழிவதற்கான பாக்கியம் இவர்களுக்குக் கிடைக்கவில்லை. இத்தகையவர்களுடைய உயிர் வெளியேறுகின்ற நேரத்தில் அவர்களுடைய முகங்கள் கருப்பாகிவிடும். அல்லது துர்வாடை உடையதாகவோ கிப்லாவை விட்டும் திரும்பக்கூடியதாகவோ இருக்கும். நன்மை கிடைக்கப் பெறுவதோ தீமை தவிர்க்கப்படுவதோ அல்லாஹ்வின் உதவி கொண்டல்லாமல் வேறில்லை.

ஆனால் நல்லோருக்கும் நபிவழியில் நடந்தோருக்கும் அல்லாஹ் அவர்களின் மரணதருவாயில் உறுதிப்பாட்டுக்கான பாக்கியத்தை வழங்குவான். அதன்படி அவர்கள் ஏகத்துவக் கலிமாவை எளிதாக மொழிந்துவிடுவார்கள். அல்லது அவர்களிடம் நல்ல முடிவின் அடையாளங்கள் தென்படும். அவர்களுடைய உயிர் பிரிகின்ற சமயத்தில் வானவர்கள் அவர்களுக்கு சொர்க்கம் குறித்து நற்செய்தி கூறுவார்கள் எனும் வகையில் சிலவேளை அவர்களுடைய முகங்கள் பிரகாசமாகவோ நறுமணம் வீசக் கூடியதாகவோ அல்லது ஒருவித மகிழ்ச்சியுடனோ காணப்படும். இத்தகையோரைப் பற்றித்தான் அல்லாஹ் பின்வருமாறு கூறியுள்ளான்:

﴿إِنَّ الَّذِينَ قَالُوا رَبُّنَا اللهُ ثُمَّ اسْتَقَامُوا تَتَنَزَّلُ عَلَيْهِمُ المَلَائِكَةُ أَلَّا تَخَافُوا وَلَا تَحْزَنُوا وَأَبْشِرُوا بِالجَنَّةِ الَّتِي كُنْتُمْ تُوعَدُونَ﴾ [فصّلت:٣٠]

“எங்கள் இறைவன் அல்லாஹ்வே” என்று கூறி பின்னர் உறுதியாகவும் இருந்தோரிடம் வானவர்கள் இறங்கி “அஞ்சாதீர்கள்! கவலைப்படாதீர்கள்! உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சொர்க்கம் குறித்து மகிழ்ச்சி அடையுங்கள்” எனக் கூறுவார்கள். (41:30)

இவ்வசனத்தின் விளக்கமாவது: “எங்கள் இறைவன் அல்லாஹ் தான்” என்று கூறி பின்னர் அந்த ஓரிறைக் கொள்கையிலும் அவர்கள் மீது கடமையான ஏனைய காரியங்களிலும் உறுதியாக இருந்தோரிடம் மரண வேளையில் வானவர்கள் இறங்கி, “மரணத்திற்காகவும் மரணத்திற்குப் பின்னுள்ள விஷயங்களுக்காகவும் நீங்கள் அஞ்ச வேண்டாம். நீங்கள் விட்டுச் சென்ற உங்கள் குடும்பம் மற்றும் பிள்ளைகளுக்காக கவலைப்பட வேண்டாம். நாம் அவர்களின் பிரதிநிதிகளாக இருப்போம். உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சொர்க்கம் குறித்து நீங்கள் மகிழ்ச்சி அடையுங்கள்” என்று கூறுவார்கள்.

**சத்தியத்தில் உறுதி: சில வரலாற்று நிகழ்ச்சிகள்**

**பிலால் பின் ரிபாஹ் (ரலி):** இவர் ஒரு நீக்ரோ அடிமை. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முதல் முஅத்தின்- தொழுகைக்காக அழைப்பு விடுப்பவர்! இவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றியும் அவர்களின் இஸ்லாமியப் பிரச்சாரத்தைப் பற்றியும் கேள்விப்பட்டதும் விரைந்து சென்று அல்லாஹ்வின் மார்க்கத்தைத் தழுவினார். இவர் இஸ்லாத்தைத் தழுவியதை இவரது

எஜமான் உமையா பின் கலப் அறிந்தவுடன் சினம் கொண்டு கொதித்தெழுந்தான். அவர் இஸ்லாத்தை விட்டும் திருப்பி விடவேண்டும் என்பதற்காக அவரைக் கொடுமைப்படுத்த ஆரம்பித்தான்.

அதனால் பிலால்(ரலி)அவர்கள் கடுமையாக அடித்து நொறுக்கப்பட்டார்கள். உணவும் தண்ணீரும் இன்றி சுட்டெரிக்கும் வெயிலில் வீசியெறிப்பட்டார்கள். மிகப் பெரும் பாராங்கற்கள் அவர்களின் நெஞ்சின் மீது வைக்கப்பட்டன. இத்தனைக்கும் அவர்கள் அஹத், அஹத்- ஏகன், ஏகன் என்றே முழங்கினார்கள். கொடுமை அதிகரித்த போதெல்லாம் இந்த முழக்கத்தைத் தான் அவர்கள் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந் தார்கள். அவரைத் தொடர்ந்து துன்புறுத்துவதில் அவருடைய எஜமான் சோர்வடைந்துவிடும் அளவுக்கு கொடுமை நீடித்தது. என்றாலும் பிலால் (ரலி) அவர்கள் தாம் ஏற்றுக் கொண்ட இஸ்லாத்தில் பிடிவாதமாக-உறுதியாக இருந்தார்கள்.

அபூபக்கர் (ரலி) அவர்கள் பிலால் அவர்களின் எஜமானிடம் வந்து பிலாலுக்கு ஒரு விலை பேசி அவர்களை விலைக்கு வாங்கி விடுதலை செய்தார்கள். பிலால்(ரலி) அவர்களும் அவர்கள் தமது மார்க்கத்தை விட்டும் மாற வேண்டும் என்பதற்காக அவர்களை அதிகம் கொடுமைப்படுத்திய உமையா பின் கலப் என்பவனும் பத்ருப் போரில் சந்தித்தனர். அந்தப் போரில்

பிலால்(ரலி) அவர்களின் கையாலேயே இந்த உமை யாவுக்கு அழிவு ஏற்பட்டது.

**அம்மார் பின் யாஸிர் (ரலி):** இவருடைய தந்தை எமனிலிருந்து வந்து மக்காவில் குடியமர்ந்தார். அங்கு கய்யாத் என்பவரின் மகள் சுமையா என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். இவ்விருவருக்கும் அம்மார் என்ற மகன் பிறந்தார். இச்சிறிய குடும்பம் விரைந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது. அதனால் குறைஷிகளிடமிருந்து பெரும் இன்னல்களை அவர்கள் சந்திந்திக்க நேரிட்டது. தமது மார்க்கத்தை விட்டுவிட வேண்டும் என்பதற்காக அக்குடும்பத்தினர் பெரும் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள்.

மக்காவின் பாலைவனத்தில் உணவு, பானம் எதுவும் இன்றி சுட்டுப் பொசுக்கின்ற வெயிலில் போடப்பட்டு சாட்டையால் அவர்களுடைய உடல் சின்னாபின்னப் படுத்தப்பட்டது. மிகப் பெரும் பாராங்கல் அவர்களுடைய நெஞ்சில் வைக்கப்பட்டது. ஆயினும் இந்தத்துன்பங்க ளெல்லாம் அவர்களை அவர்களுடைய மார்க்கத்தை விட்டும் திருப்பி விடவில்லை. மாறாக கொள்கையில் நிலைகுலையா நிலையைத்தான் அவர்களுக்கு அதிகப் படுத்தியது. இந்தக் கொடுமையில் அம்மாருடைய தாயார் கொல்லப்பட்டார். இவர் தான் இஸ்லாத்தில் இறைமார்க்கத்திற்காக உயிர்த்தியாகம் செய்த முதல் தியாகி ஆவார்.

தந்தையும் மகனும் (யாசிரும் அம்மாரும்) பொறுமை காத்தனர். அவர்களின் கொள்கைப் பிடிப்புக்கு முன்னால் இவர்களை விட்டு விடுவதைத் தவிர நிராகரிப்பாளர் களுக்கு வேறு வழி தெரியவில்லை. அம்மாரின் உண்மை யையும் சத்தியத்தில் அவருக்கு இருக்கின்ற பிடிப்பையும் கண்ட நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மாரை அதிகம் நேசித்தார்கள்.

**முஸ்அப் பின் உமைர் (ரலி):** இவர் நல்ல அழகும் பெரும் செல்வமும் உள்ள இளைஞர். செல்வத்திலும் செழிப்பிலும் வாழ்ந்து வந்தவர். முஹம்மது நபி(ஸல்) அவர்களைப் பற்றி மக்காவாசிகள் பேசிக்கொண்டதை இவர் கேள்விப்பட்டார். அதாவது “அல்லாஹ் ஒருவனை மட்டுமே வணங்க வேண்டும்; அவன் அல்லாதவர்களை வணங்கு வதை விட்டுவிட வேண்டும் என்று மக்களை அழைப்பவராக அல்லாஹ் தன்னை அனுப்பியுள்ளான்” என்று முஹம்மது நபி கூறுவதாகக் கேள்விப்பட்டார். மேலும் அபுல் அர்கம் உடைய மகன் அர்கம் என்பவரின் வீட்டில் (தாருல் அர்கம்) முஹம்மது நபியவர்கள் தமது தோழர்களுடன் அமர்ந்திருந்து அவர்களுக்கு குர்ஆனை ஓதிக்காட்டி, புதிய மார்க்கத்தை அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதையும் அறிந்தார். உடனே அன்று மாலையே அத்தோழர்களிடம் சென்று அந்த நபி அழைக்கின்ற மார்க்கத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தார்.

அதன்படி அவர் அங்கு சென்று திருக்குர்ஆன் வசனங் களை செவியேற்றவுடனேயே அவரது உள்ளத்தில் ஈமான் இடம்பிடிக்க இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். ஆனாலும் தாம் இஸ்லாத்தைத் தழுவியதை இரசியமாக வைக்க வேண்டும் என்று முடிவு செய்தார். காரணம் குறைஷிகளுக்குப் பயந்து அல்ல. மாறாக தனது தாயா ருக்குப் பயந்து. அவருடைய தாயார் அவரை மிகவும் நேசித்து வந்தார். அவரும் அவருடைய தாயாரை பெருமளவு மதித்து வந்தார்.

முஸ்அப்(ரலி) அவர்கள் தாருல் அர்க்கமுக்கு நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடமும் அவர்களது தோழர் களிடமும் தொடர்ந்து சென்று வந்தார்கள். ஆனால் ஒரு முறை முஸ்அப் தாருல் அர்கமுக்குச் செல்வதை சிலை வணங்கிகளில் ஒருவன் பார்த்துவிட்டான். உடனே இதை முஸ்அபின் தாயாரிடம் அவன் சொல்லிவிட்டான். அவ்வளவுதான்! அவரது தாயார் அவரை வீட்டின் ஓர் அறையில் பூட்டி வைத்தார்- இஸ்லாமிய மார்க்கத்தை விட்டும் அது அவரைத் திருப்பிவிட வேண்டும் என்பதற்காக! ஆனாலும் அது அவரது உறுதியையும் மார்க்கத்தில் அவருக்கிருந்த கொள்கைப் பிடிப்பையுமே அவருக்கு அதிகப்படுத்தியது.

அதன் பிறகு பூட்டி வைத்த அறையிலிருந்து அவர் தப்பி வந்ததும் அவரது தாயார் உணவு, உடை, காசு பணம் என அனைத்தையும் அவருக்குத் தடை செய்தார்.

அதனால் அந்தப் பணக்கார இளைஞன் கிழிந்த, ஒட்டுப் போடப்பட்ட ஆடையை அணியும் அளவுக்கு ஏழை யானார். இந்த நல்ல மகன் தனது தாயாரையும் இஸ்லாத்தின் பக்கம் அழைக்க முயன்றார். ஆனால் தாய் மறுத்து விட்டார். தாம் ஒருக்காலும் இந்த மார்க் கத்துக்கு வரப்போவதில்லை என சத்தியம் செய்தார்.

முஸ்அபுக்கு நபிகள் நாயகத்திடம் பெரும் அந்தஸ்து இருந்ததன் காரணமாக நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் முஸ்அபை அழைப்புப் பணி செய்வதற்காக மதினாவுக்கு அனுப்பி வைத்தார்கள். மதினாவாசிகளை அவர் இஸ்லாத்தின் பக்கம் அழைத்தார். இஸ்லாமிய மார்க் கத்தை அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்.அவர் மதினா வந்தடைந்தபோது முஸ்லிம்கள் என்று பன்னிரண்டு பேர் மட்டுமே இருந்தனர். ஆயினும் சில மாதங்களுக்குப் பிறகு அல்லாஹ்வின் அருளால் மதினாவாசிகள் அனைவரும் அவரது அழைப்பை ஏற்றுக் கொண்டனர்.

உஹதுப் போரில் வீரமிக்க இந்த வாலிபர் முஸ்லிம் களின் கொடியை ஒரு கையிலும் வாளை இன்னொரு கையிலும் ஏந்திக் கொண்டு பல வீரர்கள் போரிடுவதைப் போல போரிட்டார். இணைவைப்பவர்களில் அதிக மானோர் அவரைத் தாக்குவதற்கு அவரை நோக்கி வந்தனர். அப்போது அவர்களில் ஒருவன் தன் வாளால் முஸ்அபின் கையை வெட்டினான். அவரோ கொடியை

இன்னொரு கையில் எடுத்துக் கொண்டு தன்னை விட்டும் எதிரிகளைத் தடுப்பதற்காகத் தொடர்ந்து போராடினார்.

அந்த இணைவைப்பாளன் அவரது இன்னொரு கையையும் வெட்டினான். ஆனாலும் வீரமிக்க இந்த வாலிபர் ஊனமடைந்த தம்மிரு கைகளால் கொடியைக் கீழே விழுந்து விடாமல் ஏந்திக் கொண்டார். அந்த இணைவைப்பாளனோ அவரை விட்டுவிடவில்லை. அம்பை எடுத்து அவரது மார்பில் பாய்ச்சினான். முஸ்அப் இப்னு உமைர் கீழே சாய்ந்தார். அவரது கொடியும் கீழே விழுந்தது. இவரைப் பார்த்துவிட்டு நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இந்த வசனத்தை ஓதினார்கள்.

﴿ مِنَ الْمُؤْمِنِينَ رِجَالٌ صَدَقُوا مَا عَاهَدُوا اللهَ عَلَيْهِ ﴾ [الأحزاب:٢٣]

“நம்பிக்கை கொண்டோரில் இப்படியும் சிலர் உள்ளனர். அல்லாஹ்விடம் எதைப் பற்றி உறுதிமொழி எடுத்தார் களோ அதை அவர்கள் உண்மைப்படுத்தினர்.” (33:23)

**உம்மு ஷரீக்- கஸிய்யா பின்த் ஜாபிர் (ரலி)**

இந்தப் பெண்மணி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதை இவருடைய கணவரின் குடும்பத்தினர் அறிந்ததும் “அல்லாஹ்வின் மீது ஆணையாக! உன்னைக் கடுமை யாகத் துன்புறுத்துவோம்” என்று கூறினர். இது பற்றி கஸிய்யா கூறுவதாவது: “அவர்கள் என்னை ஒரு ஒட்டகத்தில் ஏற்றி எங்கள் வீட்டை விட்டும் வெளியே கொண்டு சென்றார்கள். அந்த ஒட்டகம் அவர்களின் மோசமான மற்றும் முரட்டுத்தனமான வாகனமாகும்.

அந்தப் பாலைவனத்தில் தேனுடன் ரொட்டியை எனக்கு உண்ணக் கொடுத்தார்கள். ஆனால் ஒரு துளிகூடத் தண்ணீர் தரவில்லை. இறுதியாக நண்பகல் ஆகி சூரியன் தனது வெப்பத்தைப் பரப்பியதும் நாங்கள் கடும் வெயிலில் நின்றிருந்தோம். அப்போது அவர்கள் தமது கூடாரங்களை அடித்து அதில் நுழைந்து கொண்டார்கள். என்னை மட்டும் வெயிலிலேயே விட்டுவிட்டனர். வெயிலின் கொடுமையால் நான் மயங்கி விடுவேன். இவ்வாறு மூன்று நாட்கள் செய்தனர்.

மூன்றாவது நாள் என்னிடம் “நீ உன்னுடைய மார்க்கத்தை விட்டுவிடு” என்று கூறினார்கள். அவர்கள் சொன்னது வார்த்தை வார்த்தையாகத்தான் மெது மெது வாகத்தான் எனக்குப் புரிந்தது. அல்லாஹ் ஒருவன் என்பதை உணர்த்தும் விதமாக நான் எனது விரலை வானத்தை நோக்கி சுட்டிக்காட்டினேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அதே நிலையில் கிடந்தேன். சிரமத்தின் உச்சிக்கே சென்றுவிட்டிருந்தேன். அப்போது எனது நெஞ்சில் ஒரு தண்ணீர் வாளியின் குளிர்ச்சி படுவதை நான் உணர்ந்தேன். அதை எடுத்து அதில் இருந்து தண்ணீரை ஒரே மூச்சில் அருந்தினேன். பிறகு அது என்னிடமிருந்து விலகியது. நான் அதைப் பார்த்த போது அது வானத்திற்கும் பூமிக்கும் இடையே தொங்கிக் கொண்டிருந்தது. பிறகு அது மீண்டும் என்னிடம் கீழே வந்தது. அதிலிருந்து தண்ணீரை ஒரே மூச்சில் அருந்தி

னேன். பிறகு அது உயர்த்தப்பட்டது. நான் அதைப் பார்த்த போது அது வானத்திற்கும் பூமிக்கும் இடையே தொங்கிக் கொண்டிருந்தது. பிறகு அது மூன்றாவது தடவையாக என்னிடம் கீழே வந்ததும் அதிலிருந்து அருந்தினேன். எனது தாகம் தணிந்தது. அந்த நீரை எனது தலையிலும் முகத்திலும் என் ஆடையிலும் ஊற்றிக் கொண்டேன்.

அதன் பிறகு என் கணவரின் குடும்பத்தினர் வந்து இதைப் பார்த்து விட்டு, “அல்லாஹ்வின் விரோதிரியே! இது உனக்கு எங்கிருந்து கிடைத்தது?” என்று கேட் டார்கள். அதற்கு நான், “அல்லாஹ்வின் விரோதி நான் அல்ல! அவனது மார்க்கத்திற்கு விரோதமாக நடப்ப வர்கள் தான் அவனுடைய விரோதி! இது எங்கிருந்து கிடைத்தது என்று நீங்கள் கேட்கிறீர்கள். இது அல்லாஹ் வின் புறத்திலிருந்து கிடைத்தது. அவனே இதை எனக்கு உணவாகக் கொடுத்துள்ளான்” என்று கூறினேன். உடனே அவர்கள் விரைந்து சென்று அவர்களுடைய தண்ணீர்ப் பையைப் பார்த்தபோது அது கட்டவிழ்க்கப்படாமல் இருந்தது. உடனே அவர்கள் “உன்னுடைய இறைவன் தான் எங்களுடைய இறைவன்! நாங்கள் உன்னிடம் இவ்வாறு நடந்து கொண்ட பிறகு இந்த இடத்தில் உனக்கு உணவளித்தவன் எவனோ அவன் தான் இஸ்லாமிய மார்க்கத்தை வகுத்துத் தந்தவன்” என்று கூறி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். பிறகு அவர்கள் அனைவரும் ஹிஜ்ரத் செய்து நபிகள் நாயகம் (ஸல்)

அவர்களிடம் சென்றனர். அல்லாஹ் எனக்குச் செய்த தையும் அவர்களை விட எனக்கு அவன் அளித்த சிறப்பையும் அவர்கள் அறிந்து கொண்டார்கள்.

# உள்ளே...


| | |
|---|---|
| 5 | முன்னுரை |
| | **உறுதியாக இருப்பதற்கான சில வழிமுறைகள்** |
| 15 | திருக்குர்ஆனின் பக்கம் திரும்புதல் |
| 17 | கல்வி |
| 18 | ஷரீஅத்தைப் பற்றிப் பிடித்து நற்செயல்கள் புரிதல் |
| 19 | நபிமார்களின் வரலாற்றைச் சிந்தித்தல் |
| 20 | பிரார்த்தனை |
| 21 | அல்லாஹ்வை நினைவுகூர்தல் |
| 21 | சரியான பாதையில் செல்வதற்கு ஆர்வம் காட்டுதல் |
| 22 | பயிற்சி |
| 25 | செல்கின்ற பாதை பற்றிய உறுதி |
| 26 | அழைப்புப் பணியில் ஈடுபடுதல் |
| 28 | உறுதிப்பாட்டை ஏற்படுத்தும் சக்திகளையே சூழ்ந்திருப்பது |
| 29 | இறையுதவியையும், எதிர்காலம் இஸ்லாத்திற்கே என்பதையும் உறுதியாக நம்புதல் |
| 30 | அசத்தியத்தின் உண்மை நிலையை அறிதலும் அதனால் ஏமாற்றம் அடையாதிருத்தலும் |
| 31 | உறுதிப்பாட்டிற்கு உதவும் நற்குணங்களைக் கடைபிடித்தல் |
| 31 | சான்றோரின் அறிவுரை |

| | |
|---|---|
| 32 | சொர்க்கத்தின் இன்பத்தையும் நரகத்தின் துன்பத்தையும் சிந்தித்தலும், மரணத்தை நினைவுகூர்தலும் |
| | **சத்தியத்தில் நிலைத்து நிற்க வேண்டிய சந்தர்ப்பங்கள்** |
| 33 | சோதனையின்போது |
| 38 | அறப்போராட்டத்தின்போது |
| 40 | இலட்சியத்தில் உறுதியுடன் இருத்தல் |
| 40 | மரணதருவாயில் உறுதியுடன் இருத்தல் |
| | **சத்தியத்தில் உறுதி- சில உதாரணங்கள்** |
| 43 | பிலால் பின் ரிபாஹ் (ரலி) |
| 45 | அம்மார் பின் யாஸிர் (ரலி) |
| 46 | முஸ்அப் பின் உமைர் (ரலி) |
| 49 | உம்மு ஷரீக்- கஸிய்யா பின்த் ஜாபிர் (ரலி) |